செய்தி வெளியீடு எண் : 1313 நாள் : 05.07.2023

# செய்தி வெளியீடு

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) பயிற்சியாளர் சேர்க்கை

தமிழகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 330 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் தற்போது 2023–2024–ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டு இருக்கைகளின் சேர்க்கைக்கான ஒதுக்கீடு விவரங்கள் 10.07.2023 அன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது முன்கூட்டியே 04.07.2023 அன்று www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தனது தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையை மேற்குறிப்பிட்ட இணையதளத்திற்குள் சென்று Log–in செய்து அறிந்து கொள்ளலாம். அதன்பிறகு சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தமது அசல் சான்றிதழுடன் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி சேர்க்கையினை உறுதிசெய்ய வேண்டும். இதற்கான கடைசி தேதி 12 .07.2023 ஆகும்.

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in